# ச மூ க அ றி வி ய ல்

## மூன்றாம் பருவம்

This is only for Sample Materials TNPSCJOB
for full Book Order Online or Available at all Leading Bookstores


# வரலாறு

## அலகு 1

# பண்டைக்கால தமிழகத்தில் சமூகமும் பண்பாடும்: சங்க காலம்

### கற்றல் நோக்கங்கள்

- பண்டைக்காலத் தமிழ்ச் சமூகத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கு முக்கியச் சான்றான சங்க இலக்கியத்தைப் பற்றிய அறிவைப் பெறுதல்.
- மூவேந்தர்கள் எனும் சேர, சோழ, பாண்டிய அரசர்களின் ஆட்சி குறித்தும் அவர்களின் சமகாலத்தவர்களான குறுநில மன்னர்கள் பற்றியும் தெரிந்துகொள்ளுதல்.
- பண்டைக்காலத் தமிழகத்தின் நிர்வாகமுறை, சமூக-பொருளாதார நிலைகள் குறித்துக் கற்றுக்கொள்ளுதல்.
- களப்பிரர் காலத்தைப் புரிந்துகொள்ளுதல்.



## பயிற்சி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. தமிழகத்தில் பத்தினி வழிபாட்டை அறிமுகம் செய்தவர் ________.**

அ) பாண்டியன் நெடுஞ்செழியன் ஆ) சேரன் செங்குட்டுவன்
இ) இளங்கோ அடிகள் ஈ) முடத்திருமாறன்

[விடை : ஆ) சேரன் செங்குட்டுவன்]

**2. கீழ்க்காணும் அரச வம்சங்களில் எது சங்க காலத்தில் ஆட்சி அதிகாரத்தில் இல்லை.**

அ) பாண்டியர் ஆ) சோழர்
இ) பல்லவர் ஈ) சேரர்

[விடை: இ) பல்லவர்]

**3. பாண்டியர் ஆட்சிக்குப் பின் ஆட்சிக்கு வந்தோர் ________ ஆவர்.**

அ) சாதவாகனர்கள் ஆ) சோழர்கள்
இ) களப்பிரர்கள் ஈ) பல்லவர்கள்

[விடை: இ) களப்பிரர்கள்]

**4. சங்க கால நிர்வாக முறையில் மிகச் சிறிய நிர்வாக அமைப்பு ________.**

அ) மண்டலம் ஆ) நாடு
இ) ஊர் ஈ) பட்டினம்

[விடை: இ) ஊர்]

**5. குறிஞ்சி நிலப்பகுதியில் வாழ்ந்த மக்களின் தொழில் யாது?**

அ) கொள்ளையடித்தல் ஆ) ஆநிரை மேய்த்தல்
இ) வேட்டையாடுதல் மற்றும் சேகரித்தல் ஈ) வேளாண்மை

[விடை: இ) வேட்டையாடுதல் மற்றும் சேகரித்தல்]



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
TNPSCJOB | www.tnpscjob.com
www.surabooks.com

TNPSCJOB



## VIII. உயர் சிந்தனை வினாக்கள் :

**1. கரிகால் வளவன் மிகச் சிறந்த சோழ அரசனாகக் கருதப்படுகிறான்: நிறுவுக.**


1. சோழ அரசர்களில் மிகவும் புகழ் பெற்றவர் கரிகால் வளவன் அல்லது கரிகாலன் ஆவார்.
2. அவர் தன்னை எதிர்த்த சேரர், பாண்டியர் மற்றும் அவர்களை ஆதரித்த பதினொன்று வேளிர் தலைவர்களின் கூட்டுப்படையைத் தஞ்சாவூர் பகுதியில் உள்ள வெண்ணி என்னும் சிற்றூரில் தோற்கடித்தார்.
3. அவர் காடுகளை விளைநிலங்களாக மாற்றினார்.
4. வேளாண்மையை மேம்படுத்துவதற்காகக் காவிரி ஆற்றின் குறுக்கே கல்லணையைக் கட்டினார்.
5. பட்டினப்பாலை எனும் பதிணென் கீழ்க்கணக்கைச் சேர்ந்த நூல், கரிகாலனின் ஆட்சியின்போது அங்கு நடைபெற்ற வணிக நடவடிக்கைகள் பற்றிய விரிவான செய்திகளை வழங்குகிறது.

**2. களப்பிரர்களின் காலம் இருண்டகாலம் அல்ல. காரணங்கள் தருக.**

1. களப்பிரர்கள் தமிழகத்தைக் கைப்பற்றி இரண்டரை நூற்றாண்டுகள் ஆட்சி செய்தனர்.
2. அவர்கள் விட்டுச்சென்ற நினைவுச் சின்னங்கள், தொல்கலைப் பொருட்கள் என எதுவுமில்லை.
3. ஆனால் அவர்களின் ஆட்சி குறித்து இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன.
4. இலக்கியச் சான்றுகள், தமிழ் நாவலர் சரிதை, யாப்பெருங்கலம், பெரியபுராணம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.
5. சீவக சிந்தாமணி, குண்டலகேசி ஆகிய இரண்டும் இக்காலத்தில் எழுதப்பட்டவைகளாகும்.
6. தமிழகத்தில் பௌத்தமும், சமணமும் முக்கியத்துவம் பெற்றகாலம்.
7. சமஸ்கிருதம், பிராகிருதம் ஆகிய மொழிகளின் அறிமுகத்தால் வட்டெழுத்து என்னும் புதிய எழுத்துமுறை உருவானது.
8. பதிணென் கீழ்கணக்கைச் சேர்ந்த பல நூல்கள் இயற்றப்பட்டன.
9. இக்காலத்தில் வணிகமும் வர்த்தகமும் தொடர்ந்து செழித்தோங்கின.
10. எனவே களப்பிரர் காலம் பொதுவாக சித்தரிக்கப்பட்டதைப் போன்று இருண்டகாலம் அல்ல.

## IX. வரைபடச் பயிற்சி

**1. தென்னிந்திய ஆறுகள் வரைபடத்தில் சேர, சோழ, பாண்டிய அரசுகளின் எல்லைகளைக் குறித்து, வர்ணம் தீட்டவும்.**





TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



2. 1) குறிஞ்சி – அ). கடலும், கடல்சார்ந்த இடம்
2) முல்லை – ஆ). வயலும், வயல் சார்ந்த இடம்
3) மருதம் – இ). வறண்ட நிலம்
4) நெய்தல் – ஈ). காடும், காடு சார்ந்த இடம்
5) பாலை – உ). மலையும், மலை சார்ந்த இடம்

[விடை: 1) உ, 2) ஈ, 3) ஆ, 4) இ, 5) அ]

## IV. சரியா/தவறா.

1. சேரநாடு முத்துகுளிப்புக்குப் புகழ்பெற்ற நாடு. [விடை: தவறு]
2. சங்க காலத்தில் பாடல்களை பாடுவோர் பாணர், விறலியர் என அழைக்கப்பட்டனர். [விடை: சரி]
3. சங்க இலக்கியங்கள் பாம்பின் தோலைக் காட்டிலும் மென்மையான துணிகளைப் (கலிங்கம்) பற்றிக் குறிப்பிடுகின்றன. [விடை: சரி]
4. சேரர்களின் சின்னம் வில், அம்பு ஆகும். [விடை: சரி]
5. சோழர்களின் சின்னம் மீன்கள். [விடை: தவறு]

## V. சுருக்கமாக விடையளிக்கவும்.

**1. சங்க காலம் என்றால் என்ன?**

சங்கம் என்னும் சொல் தமிழ்ப் புலவர்களின் குழுமத்தைச் சுட்டுகிறது. இப்புலவர்கள் இயற்றிய பாடல்கள் மொத்தமாகச் சங்க இலக்கியம் என அறியப்படுகிறது. இப்பாடல்கள் இயற்றப்பட்ட காலம் சங்க காலம் எனப்படும்.

**2. தொல்காப்பியம் - குறிப்பு எழுதுக.**

தொல்காப்பியம் ஒரு தமிழ் இலக்கண நூலாகும். அது சங்க காலத் தமிழ் மக்களின் மொழி, பண்பாடு ஆகியவற்றின் உயர் தரத்தைச் சுட்டிகாட்டுகிறது.

**3. சேர அரசர்களில் மிக முக்கியமானவர்கள் யார்?**

**சேர அரசர்களில் மிக முக்கியமானவர்கள்**

1. உதயன் சேரலாதன்
2. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்
3. சேரன் செங்குட்டுவன்
4. சேரல் இரும்பொறை.

**4. கல்லணை பற்றி நீவிர் அறிவன யாவை?**

1. கல்லணை கற்களால் கட்டப்பட்ட தடுப்பணை ஆகும்.
2. பாசனத்திற்காகக் கழிமுகப் பகுதி வழியாக நீரைத் திருப்பிவிடுவதற்காக காவிரி ஆற்றின் குறுக்கே இவ்வணை கட்டப்பட்டது.
3. கல்லணை கட்டப்பட்ட போது 69,000 ஏக்கர் நிலத்திற்கு அது நீர்பாசன வசதியை வழங்கியது.

**5. முக்கியத்துவம் வாய்ந்த சோழ அரசர்கள் யாவர்?**

1. இளஞ்சேட்சென்னி
2. கரிகால் வளவன்
3. கோச்செங்கணான்
4. கிள்ளிவளவன்
5. பெருநற்கிள்ளி

**6. பாண்டியர்கள் சூட்டிக் கொண்ட பட்டங்கள் யாவை?**

1. மாறன்
2. வழுதி
3. செழியன்
4. தென்னர்

**7. சோழர்கள் சூட்டிக் கொண்ட பட்டங்கள் யாவை?**

1. சென்னி
2. செம்பியன்
3. கிள்ளி
4. வளவன்




TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



## II. கூற்றைக் காரணத்துடன் பொருத்திப் பார்த்து சரியான விடையைக் கண்டுபிடிக்கவும்

**1.** **கூற்று** : **இந்தோ-கிரேக்கர்களின், இந்தோ-பார்த்தியர்களின் குடியேற்றங்கள் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் நிறுவப்பட்டன.**

**காரணம்** : **குடியேறிய பாக்டீரியர்களும் பார்த்தியர்களும் படிப்படியாக உள்ளூர் மக்களுடன் திருமண உறவுகொண்டு இரண்டறக் கலந்தனர்.**

அ) கூற்றும் காரணமும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.

ஆ) கூற்றும் காரணமும் சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.

இ) கூற்று சரி, ஆனால் காரணம் தவறு

ஈ) கூற்று தவறு, ஆனால் காரணம் சரி

**[விடை: அ) கூற்றும் காரணமும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.]**

**2.** **கூற்று 1** : **இந்தோ-கிரேக்க ஆட்சியாளர்கள் அச்சு முறையை அறிமுகம் செய்து சின்னங்களும், உருவங்களும், பெயர்களும் பொறிக்கப்பட்ட நாணயங்களை வெளியிட்டனர்.**

**கூற்று 2** : **இந்தோ-கிரேக்கர்களின் ஆட்சியைக் குஷாணர் முடித்துவைத்தனர்.**

அ) கூற்று '1' தவறு , ஆனால் கூற்று '2' சரி

ஆ) கூற்று '2' தவறு , ஆனால் கூற்று '1' சரி

இ) இரண்டு கூற்றுகளுமே சரி

ஈ) இரண்டு கூற்றுகளுமே தவறு **[விடை: ஆ) கூற்று '2' தவறு , ஆனால் கூற்று '1' சரி]**

**3.** **பொருந்தாததை வட்டமிடுக.**

**புஷ்யமித்ரர் வாசுதேவர் சிமுகா கனிஷ்கர்**

**விடை: கனிஷ்கர்**

கனிஷ்கர் புத்த மதத்தை பின்பற்றினார். ஆனால் மற்ற மூவரும் புத்த மதத்தை பின்பற்றவில்லை.

**4.** **ஒரு வார்த்தையில் பதில் எழுதவும்**

1. **கடைசி சுங்க அரசர் யார்?**

   தேவபூதி.

2. **சாகர்களில் மிக முக்கியமான, புகழ் பெற்ற அரசர் யார்?**

   ருத்ரதாமன்.

3. **மகதத்தில் கன்வ வம்சத்தை நிறுவியர் யார்?**

   வாசுதேவர்.

4. **கோண்டோ பெர்னஸைக் கிறித்துவ மதத்திற்கு மாற்றியவர் யார்?**

   புனித தாமஸ்.

## III. கோடிட்ட இடங்களை நிரப்பவும்.

**1.** இந்தோ-பார்த்திய அரசை நிறுவியவர் ____________. **[விடை: கோண்டோ பெர்னஸ்]**

**2.** தெற்கே ________ இறப்பிற்குப் பின்னர் சாதவாகனர் சுதந்திர அரசர்களாயினர். **[விடை: அசோகரின்]**

**3.** ஹாலா எழுதிய, நூலின் பெயர் ____________. **[விடை: சட்டசாய் (சப்தசதி)]**

**4.** ____________ கன்வ வம்சத்தின் கடைசி அரசராவார். **[விடை: சுசர்மன்]**

**5.** குஷாணர்களின் பிந்தைய தலைநகரம் ____________ ஆகும். **[விடை: பெஷாவர் (புருஷபுரம்)]**

## IV. சரியா/தவறா என எழுதுக.

**1.** மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னரும் மகதம் தொடர்ந்து ஒரு பௌத்த பண்பாட்டு மையமாகத் திகழ்ந்தது. **[விடை: சரி]**



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



## X. செயல்பாடு

**1. சாதவாகனர், குஷாணர் ஆகியோர்களின் தொல்லியல் நினைவுச் சின்னன்னங்கள் அமைந்துள்ள இடங்களைப் பற்றி ஒரு ஆல்பம் (செருகேடு) தயார் செய்யசெய்யவும்.**

**சாதவாகனர் :**

1. சாதவாகனர் அமராவதியில் பௌத்த ஸ்தூபிகளைக் கட்டினர்.
2. வியட்நாமில் உள்ள ஒக்–யோ என்னும் தொல்லியல் ஆய்விடத்தில் புத்தரின் வெண்கலச் சிலை நிறுவப்பட்டுள்ளது.
3. தாய்லாந்தில் நாக்கான் பதோம் என்ற இடத்தில் கல்லால் ஆன முத்திரை வைக்கப்பட்டுள்ளது.
4. காந்தாரம், மதுரா, அமராவதி, புத்தகயா, சாஞ்சி, பாகுத் ஆகிய இடங்கள் கலைகளுக்கும், கட்டடங்களுக்கும் பெயர் பெற்றவையாகும்.

**குஷாணர் :**

1. குஷாணர் கால நாணயங்களில் கிரேக்கத்தின் செல்வாக்கு புலனாகிறது.
2. குஷாணர்கள் பௌத்த மதத்தைப் பின்பற்றினர். இதன் விளைவாக தட்சசீலமும் மதுராவும் மிகச் சிறந்த கல்வி மையங்களாகச் செயல்பட்டன.

**2. இந்தோ-கிரேக்கர், சாகர், குஷாணர் ஆகியோரின் பண்பாட்டுப் பங்களிப்பு குறித்து வகுப்பறையில் மாணவர்களை விவாதிக்க செய்யவும்.**

**இந்தோ – கிரேக்கர் :**

1. இந்தோ – கிரேக்க ஆட்சியாளர்கள் அச்சு வார்க்கும் முறையை அறிமுகம் செய்து, நேர்த்தியான வடிவங்களில் நாணயங்களை வெளியிட்டனர்.
2. அவற்றில் எழுத்துக்களும், சின்னங்களும், உருவங்களும் பொறிக்கப்பட்டன. இம்முறையை இந்தியர்கள் இவர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர்.
3. இந்தியாவின் காந்தாரக் கலைப்பள்ளி கிரேக்கர்களின் சிற்பக் கலைக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளது.
4. கிரேக்கர்கள் குகைகளை அமைப்பதில் சிறந்தவர்கள்.

**சாகர் :**

1. ருத்ரதாமன் சாகர் வம்சத்தின் புகழ்வாய்ந்த அரசர் ஆவார்.
2. அவருடைய ஜீனாகத் / கிர்னார் கல்வெட்டு தூய சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட முதல் கல்வெட்டுக் குறிப்பாகும்.
3. இந்தியாவில் சாகர்கள் இந்தியச் சமூகத்தினுள் இரண்டறக் கலந்து வாழ்ந்தனர்.

**குஷாணர் :**

1. கனிஷ்கர் கலை, இலக்கியங்களின் மிகப்பெரும் ஆதரவாளர் ஆவார். அஸ்வகோஷர், வசுமித்ரா, நாகர்ஜுனா போன்ற எண்ணற்ற பௌத்தத் துறவிகளாலும் அறிஞர்களாலும் அவருடைய அவை அலங்கரிக்கப்பட்டது.
2. காஷ்மீரில் கனிஷ்கபுரா எனும் புதிய நகரை உருவாக்கி அதன் தலைநகர் புருஷ்புராவை அற்புதமான கட்டங்களால் அழகுபடுத்தினார்.
3. இவருடைய காலத்தில் காந்தாரக் கலைப்பள்ளி செழித்தோங்கியது. புத்தரின் சிலைகளைச் செதுக்குவது காந்தாரக் கலைஞர்களுக்கு விருப்பமானதாக இருந்தது.
4. குஷாணர் காலத்தில் மாபெரும் ஆசியப் பண்பாடானது இந்திய பௌத்தப் பண்பாட்டோடு கலந்தது.



TNPSCJOB | www.tnpscjob.com

This is only for Sample Materials TNPSCJOB
for full Book Order Online or Available at all Leading Bookstores

அலகு 3

# பேரரசுகளின் காலம்: குப்தர், வர்த்தனர்

## கற்றல் நோக்கங்கள்

- குப்த அரச வம்சம் நிறுவப்பட்டதையும், குப்த அரசர்களின் பேரரசு உருவாக்க முயற்சிகளையும் அறிந்துகொள்ளுதல்.
- குப்தர் காலத்து அரசு அமைப்பு, சமூகம், பொருளாதாரம் பற்றிய அறிவினைப் பெறுதல்.
- கலை, கட்டடக்கலை, இலக்கியம், கல்வி, அறிவியல், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் குப்தர்களின் பங்களிப்பைத் தெரிந்துகொள்ளுதல்.
- ஹர்ஷவர்தனருடைய ஆட்சியின் முக்கியத்துவத்தை ஆராய்தல்.



## பயிற்சி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. குப்த வம்சத்தை நிறுவியவர் ________ ஆவார்.**

அ) முதலாம் சந்திரகுப்தர் ஆ) ஸ்ரீ குப்தர்
இ) விஷ்ணுகோபர் ஈ) விஷ்ணுகுப்தர் [விடை: ஆ) ஸ்ரீ குப்தர்]

**2. பிரயாகை மெய்கீர்த்தியை இயற்றியவர் ________ ஆவார்.**

அ) காளிதாசர் ஆ) அமரசிம்மர்
இ) ஹரிசேனர் ஈ) தன்வந்திரி [விடை: இ) ஹரிசேனர்]

**3. சந்திரகுப்தரால் நிறுவப்பட்ட ஒற்றை இரும்புத் தூண் ________ என்ற இடத்தில் உள்ளது.**

அ) மெக்ராலி ஆ) பிதாரி
இ) கத்வா ஈ) மதுரா [விடை: அ) மெக்ராலி]

**4. அறுவைச் சிகிச்சைச் செயல்முறை குறித்து விளக்கிய முதல் இந்தியர் ________.**

அ) சரகர் ஆ) சுஸ்ருதர்
இ) தன்வந்திரி ஈ) அக்னிவாசர் [விடை: ஆ) சுஸ்ருதர்]

**5. வங்காளத்தின் கௌட அரசர் ________.**

அ) சசாங்கர் ஆ) மைத்திரகர்
இ) ராஜ வர்த்தனர் ஈ) இரண்டாம் புலிகேசி [விடை: அ) சசாங்கர்]



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**3. அரசர்களின் தெய்வீக உரிமைக் கோட்பாட்டை விளக்குக.**

தெய்வீக உரிமைக் கோட்பாடு : அரசர் கடவுளின் பிரிதிநிதியாக கருதப்பட்டார். எனவே அரசர் கடவுளுக்கு மட்டுமே பதில் சொல்லக் கடமைப்பட்டவராவார். மற்றவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டியதில்லை எனும் கோட்பாடு.

**4. உலோகவியலில் குப்தர்களின் சாதனைகளை எடுத்துக் கூறுக.**

1. குப்தர்கள் காலத்தில் சுரங்கத் தொழிலும் உலோகத் தொழிலும் செழிப்புற்று விளங்கின.
2. உலோகத் தொழில் வளர்ச்சி பெற்றிருந்தது என்பதற்கு எடுத்துக்காட்டு சந்திரகுப்தரால் நிறுவப்பட்ட மெக்ராலி இரும்புத் தூணாகும். டெல்லியிலுள்ள இத்தூண் இன்றளவும் துருப்பிடிக்காமல் உள்ளது.

**5. ஹூணர்கள் என்போர் யார்?**

1. ஹூணர்கள் என்பவர்கள் நாடோடிப் பழங்குடியினர் ஆவார்.
2. ஸ்கந்தகுப்தரைத் தோற்கடித்த பின்னர் இவர்கள் மத்திய இந்தியப் பகுதிகளில் பரவினர்.

**6. ஹர்ஷர் காலத்தில் வசூலிக்கப்பட்ட மூன்று வகையான வரிகளைக் குறிப்பிடுக.**

1. பாகா 2. ஹிரண்யா 3. பாலி

**7. ஹர்ஷர் எழுதிய நூற்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

1. ரத்னாவளி 2. நாகநந்தா 3. பிரியதர்சிகா

## VII. சுருக்கமான விடையளிக்கவும்

**1. மெய்க்கீர்த்தி பற்றி சிறுகுறிப்பு வரைக.**

1. பிரசஸ்தி அல்லது மெய்க்கீர்த்தி என்றும் அழைக்கப்படும்.
2. பிரசஸ்தி என்பது ஒரு சமஸ்கிருதச் சொல். அதன் பொருள் ஒருவரைப் பாராட்டிப் 'புகழ்வதாகும்'.
3. அவைக்களப் புலவர்கள் அரசர்களைப் புகழ்ந்து பாடி அவர்தம் சாதனைகளைப் பட்டியலிட்டனர்.
4. இவை பின்னர் மக்கள் படித்துத் தெரிந்து கொள்வதற்காகத் தூண்களில் பொறிக்கப்பட்டன.

**2. சமுத்திரகுப்தரின் படையெடுப்புகள் குறித்து எழுதுக.**

1. சமுத்திரகுப்தர் மகத்தான போர்த்தளபதியாவார். அவர் பேரரசர் ஆனவுடன் நாடு முழுவதும் படையெடுத்துச் சென்றார்.
2. தென்னிந்தியாவில் பல்லவ நாட்டு அரசர் விஷ்ணுகோபனை சமுத்திரகுப்தர் தோற்கடித்தார்.
3. வட இந்தியாவில் சமுத்திரகுப்தர் ஒன்பது அரசுகளைக் கைப்பற்றினார்.
4. தென்னிந்தியாவைச் சேர்ந்த 12 அரசர்களைத் தனக்குக் கட்டுப்பட்ட சிற்றரசர்களாக்கி அவர்களைக் கப்பம் கட்டச் செய்தார்.
5. கிழக்கு வங்களாம், அஸ்ஸாம், நேபாளம், பஞ்சாபின் கிழக்குப் பகுதி ஆகியவற்றின் அரசர்களும் ராஜஸ்தானத்தைச் சேர்ந்த பல்வேறு பழங்குடியினரும் சமுத்திரகுப்தரின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டனர்.

**3. குப்தர்கள் காலத்தில் நிலங்கள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டன?**

1. ஷேத்ரா – வேளாண்மைக்கு உகந்த நிலங்கள்
2. கிலா – தரிசு நிலங்கள்
3. அப்ரகதா – வனம் அல்லது காட்டு நிலங்கள்
4. வஸ்தி – குடியிருப்பதற்கு உகந்த நிலங்கள்
5. கபத சரகா – மேய்ச்சல் நிலங்கள்


TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



## V. சுருக்கமான விடையளிக்கவும்.

### 1. முதலாம் சந்திரகுப்தர் - குறிப்பு வரைக.

1. முதலாம் சந்திரகுப்தர் லிச்சாவி அரச குடும்பத்தைச் சேர்ந்த குமாரதேவியை மணந்தார்.
2. இவர் வட இந்தியச் சிற்றரசுகள் பலவற்றை வெற்றிக்கொண்டு ஒரு பேரரசின் முடியரசராகத் தன்னை முடி சூட்டிக்கொண்டார்.
3. இவர் தங்க நாணயங்களை வெளியிட்டார் என கருதப்படுகிறது.
4. அதில் சந்திரகுப்தர், குமாரதேவி ஆகிய இருவரின் உருவங்கள் இடம் பெற்றுள்ளன.

### 2. சமுத்திரகுப்தர் - குறிப்பு தருக.

1. முதலாம் சந்திரகுப்தரின் மகனான சமுத்திரகுப்தர் குப்த அரச வம்சத்தின் தலைசிறந்த அரசர் ஆவார்.
2. இவரின் அவைப் புலவர் 'ஹரிசேனர்' இயற்றிய பிரயாகை மெய்க்கீர்த்தி அலகாபாத் தூணில் பொறிக்கப்பட்டுள்ளது.
3. இவரின் ஆட்சிக்கான மிக முக்கியச் சான்று அலகாபாத் தூண் கல்வெட்டாகும்.

### 3. விக்கிரமாதித்யரின் அவையிலிருந்த நவரத்தினங்கள் யாவர்?

காளிதாசர், ஹறிசேனர், அமரசிம்ஹர், தன்வந்திரி, காகபானகர், சன்கு, வராகமிகிரர், வராச்சி, விட்டல்பட்டர் ஆகியவர்கள் விக்கிரமாதித்யரின் அவையிலிருந்த நவரத்தினங்கள் ஆவர்.

## VII. விரிவான விடையளி :

### 1. ஹர்ச வர்த்தனரின் படையெடுப்புகள் பற்றி விளக்குக.

1. வரத்தன அரச வம்சத்தின் புகழ்பெற்ற அரசர் ஹர்ஷவர்த்தனர் ஆவார். இவர் 41 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்.
2. ஜலந்தர், காஷ்மீர், நேபாளம் வல்லபி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குறுநில மன்னர்கள் ஹர்ஷருக்குக் கட்டுப்பட்டவர்கள் ஆவர்.
3. வங்களாத்தைச் சேர்ந்த சசாங்கர் தொடர்ந்து பகையுணர்வுடன் நடந்து கொண்டார்.
4. வட இந்தியாவின் பெரும்பகுதிகளை ஹர்ஷரே ஒருங்கிணைத்தார்.
5. ஆனால் தென்னிந்தியாவில் அவர் ஆட்சியை பரப்புவதற்கு எடுத்த முயற்சியை சாளுக்கிய அரசர் இரண்டாம் புலிகேசி தடுத்து நிறுத்தினார்.
6. கி.பி.648-ல் ஹர்ஷரின் மறைவோடு அவருடைய அரசு சிதைந்து பல சிற்றசுகள் ஆனது.
7. ஹர்ஷர், சீனா, ஈரான் ஆகிய நாடுகளின் அரசர்களோடு சுமூகமான உறவைப் பேணினார்.

### 2. குப்தர்காலக் கலையைப் பற்றி விளக்குக.

1. கட்டுமானக் கோவில்களை முதன்முதலாகக் கட்டியவர்கள் குப்தர்களே.
2. இது முன்பிருந்த மரபான பாறைக் குடைவரைக் கோவில்களின் அடுத்தக் கட்ட பரிணாம வளர்ச்சியாகும்.
3. கோபுரங்களோடும் விரிவான செதுக்க வேலைபாடுகளோடும் அனைத்து இந்து தெய்வங்களுக்கும் இக்கோவில்கள் கட்டப்பட்டன.
4. மிகவும் குறிப்பிடத்தக்க பாறைக் குடைவரைக் குகைகள் அஜந்தா, எல்லோரா (மகாராஷ்டிரா), பாக் (மத்தியப் பிரதேசம்), உதயகிரி (ஒடிசா) ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.
5. இக்காலப் பகுதியில் கட்டப்பட்ட கட்டுமானக் கோவில்கள், திராவிட பாணிக் கூறுகளை ஒத்திருக்கின்றன.
6. குப்தர்களின் உலோக சிற்பத்திற்கு இரு சிறந்த எடுத்துக்காட்டுகள். நாளந்தாவிலுள்ள 18 அடி உயரமுள்ள புத்தரின் செப்புச் சிலை.
7. சுல்தான் கஞ்ச் என்னும் இடத்திலுள்ள ஏழரை அடி உயரமுள்ள புத்தரின் உலோகச் சிற்பம்.
8. குப்தர்களின் ஓவியக் கலைக்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகத் திகழ்பவை அஜந்தா குகை ஓவியங்களும் குவாலியர் பாக் குகையில் காணப்படும் ஓவியங்களும் ஆகும்.

☆☆☆


TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



## V. சரியா/தவறா

1. புகழ்பெற்ற இசைக் கலைஞர் ருத்ராச்சாரியர் முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் வாழ்ந்தவர். **[விடை: சரி]**
2. ராஷ்டிரகூட வம்சத்தின் தலைசிறந்த அரசர் இரண்டாம் புலிகேசி. **[விடை: தவறு]**
3. மாமல்லபுரம் யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியச் சின்னங்களில் ஒன்றாகும். **[விடை: சரி]**
4. தேவாரம் ஆழ்வார்களால் இயற்றப்பட்டது. **[விடை: தவறு]**
5. விருப்பாக்ஷா கோவில் காஞ்சி கைலாசநாதர் கோவிலை மாதிரியாகக் கொண்டு கட்டப்பட்டதாகும். **[விடை: சரி]**

## VI. ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்.

**1. கன்னட இலக்கியத்தின் மூன்று இரத்தினங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

கன்னட இலக்கியத்தின் மூன்று இரத்தினங்கள் ஆதிகவி பம்பா, ஸ்ரீபொன்னா, ரன்னா ஆகியோராவர்.

**2. பல்லவர்களின் கட்டடக் கலையை நாம் எவ்வாறு வகைப்படுத்தலாம்?**

பல்லவர் கட்டடக் கலையை கீழ்க்காணுமாறு வகைப்படுத்தலாம்.

1. பாறைக்குடைவரைக் கோவில்கள் – மகேந்திரவர்மன் பாணி
2. ஒற்றைக்கல் ரதங்களும் சிற்ப மண்டபங்களும் – மாமல்லன் பாணி
3. கட்டுமானக் கோவில்கள் – ராஜசிம்மன் பாணி, நந்திவர்மன் பாணி

**3. கடிகை பற்றி நீங்கள் அறிந்ததென்ன?**

காஞ்சியிலிருந்த கடிகை என்பது மடாலயம் அல்லது கல்வி மையம் என்பதாகும். இது பல்லவர் காலத்தில் புகழ்பெற்று விளங்கியது. இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் மாணவர்களைத் தன்பால் ஈர்த்தது. நியாய பாஷ்யா எனும் நூலை எழுதிய வாத்ஸ்யாயர் காஞ்சிக் கடிகையில் ஆசிரியராக இருந்தார்.

**4. பஞ்சபாண்டவர் ரதங்கள் ஒற்றைப் பாறைக்கல் ரதங்கள் ஆகும்-விளக்குக.**

மாமல்லபுரத்திலுள்ள பஞ்சபாண்டவர் ரதங்கள் எனப் பிரபலமாக அழைக்கப்படும் ஐந்து ரதங்கள், ஐந்து வகையான கோவில் கட்ட பாணியை உணர்த்துகின்றன. ஒவ்வொரு ரதமும் ஒவ்வொரு தனிக் கல்லிலிருந்து செதுக்கப்பட்டிருக்கின்றன. எனவே அவை ஒற்றைக்கல் ரதங்கள் என அழைக்கப்படுகின்றன.

**5. தக்கோலம் போர் பற்றிக் குறிப்பெழுதுக.**

மூன்றாம் கிருஷ்ணர் ராஷ்டிரகூட வம்சத்தின் திறமை வாய்ந்த கடைசி அரசர் ஆவார். இவர் சோழர்களைத் தக்கோலம் (தற்போதைய வேலூர் மாவட்டத்தில் உள்ளது) போர்களத்தில் தோற்கடித்துத் தஞ்சாவூரைக் கைப்பற்றினார்.

## VII. கீழ்க்காண்பனவற்றிற்கு விடையளிக்கவும்.

**1. கட்டடக் கலைக்கு பல்லவர்கள் ஆற்றிய பங்களிப்பைத் திறனாய்வு செய்க.**

**கட்டடக் கலைக்கு பல்லவர்களின் பங்களிப்பு :**

1. பல்லவர் காலம் கட்டடக்கலைக்கு பெயர் பெற்றது.
2. மாமல்லபுரத்திலுள்ள ஒற்றைக் கருங்கல்லில் செதுக்கி உருவாக்கப்பட்ட கடற்கரைக் கோவிலும், ஏனைய கோவில்களும், வராகர் குகையும் பல்லவக் கட்டடக் கலையின் ஈடு இணையற்ற அழகிற்கு எடுத்துக்காட்டுகளாகும்.
3. 1984 ஆம் ஆண்டு யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியச் சின்னங்கள் அட்டவணையில் மாமல்லபுரம் சேர்க்கப்பட்டது.




TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**4. 1984 ஆம் ஆண்டு யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியச் சின்னமாக ____________ சேர்க்கப்பட்டது.**

அ) மாமல்லபுரம் ஆ) மாமண்டூர்

இ) வல்லம் ஈ) கடிகை **[விடை: அ) மாமல்லபுரம்]**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. எலிபெண்டா தீவு இயற்பெயர் ____________ **[விடை: ஸ்ரீபுரி]**
2. காஞ்சிபுரத்தில் உள்ள கைலாசநாதர் கோயில் ________ கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாகும். **[விடை: கட்டுமானக் கோவில்]**
3. நியாயபாஷ்யா என்னும் நூலை எழுதியவர் ________. **[விடை: வாத்ஸ்யாயர்]**
4. மாபெரும் சமஸ்கிருத அறிஞரான ________ முதலாம் நரசிம்மவர்மனின் அவையை அலங்கரித்தார். **[விடை: தண்டின்]**
5. பெருந்தேவனார் மகாபாரதத்தை ________ எனும் பெயரில் தமிழில் மொழிபெயர்த்தார். **[விடை: பாரதவெண்பா]**

## III. பொருத்துக.

| | |
|---|---|
| 1) பதாமி | - அ). கர்நாடகா |
| 2) கன்னேஸ்வரர் கோவில் | - ஆ). பட்டடக்கல் |
| 3) யுனெஸ்கோ பாரம்பரியச்சின்னம் | - இ). ராஷ்டிர கூடர்கள் |
| 4) அய்கோல் கல்வெட்டு | - ஈ). பகலி |
| 5) சமணநாராயண கோவில் | - உ). குகைக் கோவில் |

**[விடை: 1) உ, 2) ஈ, 3) ஆ, 4) அ, 5) இ]**

## IV. சரியா/தவறா.

1. அமோகவர்ஷரால் இயற்றப்பட்ட கவிராஜ மார்க்கம் கன்னட மொழியின் முதல் கவிதை நூலாகும். **[விடை: சரி]**
2. கைலாசநாதர் கோவில் இந்தோகிரேக்க கட்டடக்கலையின் கூறுகளைக் கொண்டுள்ளது. **[விடை: தவறு]**
3. எலிபெண்டா தீவு ராஜஸ்தானில் உள்ளது. **[விடை: தவறு]**
4. பல்லவர்களின் காலம் கட்டடக்கலைக்கு பெயர் பெற்ற காலமாகும். **[விடை: சரி]**
5. அஜந்தா குகைகளில் காணப்படும் சில சுவரோவியங்கள் சாளுக்கியர் காலத்தைச் சேர்ந்தவை. **[விடை: சரி]**

## V. ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்.

**1. பரஞ்சோதி - குறிப்புத் தருக.**

முதலாம் நரசிம்மவர்மனின் படைத்தளபதி பரஞ்சோதி சிறுத்தொண்டர் எனப் பிரபலமாக அறியப்பட்டார். இவர் வாதாபி படையெடுப்பில் பல்லவர் படைக்குத் தலைமை ஏற்று நடத்தினார். அதன் வெற்றிக்கு பின்னர் சிவ பக்தராக மாறினார்.

**2. பல்லவ அரசர்களின் மிக முக்கிய அரசர்கள் யாவர்?**

பல்லவ அரசர்களின் மிக முக்கிய அரசர்கள் முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன், இரண்டாம் நரசிம்மவர்மன் மற்றும் இரண்டாம் நந்திவர்மன் ஆவர்.

**3. முதலாம் மகேந்திரவர்மன் பெற்ற பட்டங்கள் யாவை?**

முதலாம் மகேந்திரவர்மன் பெற்ற பட்டங்கள் சங்கீரணஜதி, மத்தவிலாசன், குணபாரன், சித்திரகாரப்புலி, விசித்திர சித்தன்.




TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



4. சுரங்கத் தொழில், உற்பத்தி தொழில்கள், வர்த்தகம், பெரும் சந்தைகளாகச் செயல்படுதல், மனித வளம் மற்றும் வேளாண் உற்பத்தி ஆகியன மக்கள் தொகை மிகுந்து காணப்படக் காரணமாக அமைகின்றன.

**10. ஐரோப்பாவில் கொண்டாடப்படும் விழாக்கள் சிலவற்றின் பெயர்களைக் குறிப்பிடு.**

**ஐரோப்பாவில் கொண்டாடப்படும் விழாக்கள் :**

1. கிறிஸ்துமஸ்
2. ஈஸ்டர்
3. புனிதவெள்ளி
4. புனிதர்கள் நாள்
5. ரெடன் டோர்
6. டோமாட்டினா மற்றும்
7. கார்னிவல் ஆகும்.

## VI. வேறுபடுத்துக.

**1. மலையிடைப் பீடபூமி மற்றும் தென் பீடபூமி.**

| | மலையிடைப் பீடபூமி | தென்பீடபூமி |
|---|---|---|
| 1. | மலையிடைப் பீடபூமி மலைத் தொடர்களிடையே காணப்படும் | தென்பீடபூமி, வடபீடபூமியைக் காட்டிலும் உயரம் குறைந்தவை. |
| 2. | (எ.கா.) ஈரான் பீடபூமி, திபெத்திய பீடபூமி | (எ.கா.) அரேபிய பீடபூமி, தக்காண பீடபூமி |

**2. வெப்பப் பாலைவனம் மற்றும் குளிர்பாலைவனம்.**

| | வெப்பப் பாலைவனம் | குளிர் பாலைவனம் |
|---|---|---|
| 1. | அரேபிய பாலைவனம் சௌதி அரேபியாவில் உள்ளது. | கோபி பாலைவனம் கிழக்கு சீனாவில் உள்ளது. |
| 2. | தார் பாலைவனம் இந்தியாவில் உள்ளது. | தக்லாமக்கன் பாலைவனம் வடமேற்கு சீனாவில் உள்ளது. |
| 3. | அரேபிய மற்றும் தார் பாலைவனம் வெப்பப் பாலைவனங்களாகும். | கோபி மற்றும் தக்லாமக்கன் குளிர் பாலைவனங்களாகும். |

**3. தூந்திரா மற்றும் டைகா.**

| | தூந்திரா | டைகா |
|---|---|---|
| 1. | தூந்திரா வகை இயற்கைத் தாவரங்கள் ஆர்டிக் மற்றும் வடஸ்காண்டிநேவிய உயர்நிலங்களில் காணப்படுகின்றன. | டைகா அல்லது ஊசியிலைக் காடுகள் நார்வே, சுவீடன், பின்லாந்து, ஜெர்மனி, போலந்து மற்றும் ஆஸ்திரியா ஆகிய நாடுகளில் காணப்படுகின்றன. |
| 2. | இங்கு லிச்சன்ஸ் மற்றும் பாசி வகைகள் காணப்படுகின்றன. | இங்கு பைன், ஃபிர், ஸ்புரூஸ் மற்றும் லார்ச் போன்ற முக்கிய மரவகைகள் காணப்படுகின்றன. |

**4. வடமேற்கு உயர்நிலம் மற்றும் ஆல்பைன் மலைத்தொடர்.**


| | வடமேற்கு உயர்நிலம் | ஆல்பைன் மலைத்தொடர் |
|---|---|---|
| 1. | நார்வே, ஸ்வீடன், பின்லாந்து, ஸ்காட்லாந்து மற்றும் ஐஸ்லாந்து ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது. | ஆல்பைன் மலைத்தொடர் தெற்கு ஐரோப்பிய பகுதியில் காணப்படும் தொடர்ச்சியான இளம் மடிப்பு மலையாகும். |
| 2. | இது மிக அழகிய பிளவுப்பட்ட (fiord) கடற்கரையைக் கொண்டது. | இம்மலைத் தொடரின் உயரமான சிகரம் எல்ப்ராஸ் சிகரமாகும். |


TNPSCJOB | www.tnpscjob.com


## IX. படப்பயிற்சி

**1. ஆசியா மற்றும் ஐரோப்பா வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.**

**ஆசியா :** யூரல்மலை, இமயமலை, பாமீர், கோபி பாலைவனம், அரேபியன் தீபகற்பம், தக்காண பீடபூமி, யாங்சி ஆறு, ஓப் ஆறு, ஏரல் கடல் மற்றும் பைகால் ஏரி.




**ஐரோப்பா :** பைரீனிஸ், கருங்காடுகள், அப்பென்னிஸ், ஹங்கேரியன் சமவெளி, காகஸஸ் மலை, வோல்கா ஆறு, டானுப் ஆறு, ஜிப்ரால்டர் நீர்ச்சந்தி, லடோகா ஏரி, வடகடல்.




சமூக அறிவியல்

TNPSCJOB
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

அலகு **2**

# புவி மாதிரி

## கற்றல் நோக்கங்கள்

- நான்கு அடிப்படை திசைகள் பற்றி அறிதல்.
- புவியின் வடிவம் பற்றி அறிந்து கொள்ளல்.
- புவி மாதிரியைப் பற்றி புரிந்து கொள்ளல்.
- அட்சக்கோடுகள் மற்றும் தீர்க்கக்கோடுகள் பற்றி தெரிந்து கொள்ளுதல் மற்றும் அவற்றின் பயன்களை அறிதல்.
- உலகில் திட்டநேரம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது என்பதை தெரிந்து கொள்ளுதல்.



## பயிற்சி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

**1. புவியின் வடிவம்**

அ) சதுரம் ஆ) செவ்வகம்
இ) ஜியாய்டு ஈ) வட்டம்

**[விடை : இ) ஜியாய்டு]**

**2. வடதுருவம் என்பது**

அ) 90° வ அட்சக்கோடு ஆ) 90° தெ அட்சக்கோடு
இ) 90° மே தீர்க்கக்கோடு ஈ) 90° கி தீர்க்கக்கோடு

**[விடை : அ) 90° வ அட்சக்கோடு]**

**3. 0° முதல் 180° கிழக்கு தீர்க்கக்கோடு வரை காணப்படும் புவிப் பகுதி இவ்வாறு அழைக்கப்படுகிறது.**

அ) தெற்கு அரைக்கோளம் ஆ) மேற்கு அரைக்கோளம்
இ) வடக்கு அரைக்கோளம் ஈ) கிழக்கு அரைக்கோளம்

**[விடை : ஈ) கிழக்கு அரைக்கோளம்]**

**4. 23½° வ அட்சக்கோடு இவ்வாறு அழைக்கப்படுகிறது.**

அ) மகரரேகை ஆ) கடகரேகை
இ) ஆர்க்டிக் வட்டம் ஈ) அண்டார்டிக் வட்டம்

**[விடை : ஆ) கடகரேகை]**

**5. 180° தீர்க்கக்கோடு என்பது**

அ) நிலநடுக்கோடு ஆ) பன்னாட்டு தேதிக்கோடு
இ) முதன்மை தீர்க்கக்கோடு ஈ) வடதுருவம்

**[விடை : ஆ) பன்னாட்டு தேதிக்கோடு]**

**6. கிரீன்விச் முதன்மை தீர்க்கக்கோட்டிற்கு நேர் உச்சியில் சூரியன் இருக்கும்போது அவ்விடத்தின் நேரம்.**

அ) நள்ளிரவு 12 மணி ஆ) நண்பகல் 12 மணி
இ) பிற்பகல் 1 மணி ஈ) முற்பகல் 11 மணி

**[விடை : ஆ) நண்பகல் 12 மணி]**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
TNPSCJOB | www.tnpscjob.com
www.surabooks.com

TNPSCJOB



2. இதனால் புவியின் மற்ற பகுதிகளைவிட இங்கு அதிக வெப்பநிலை நிலவுகிறது. எனவே இப்பகுதி வெப்பமண்டலம் என அழைக்கப்படுகிறது.

**ஆ) மிதவெப்ப மண்டலம்:**

1. வட அரைக்கோளம் கடகரேகை (23½° வ) முதல் ஆர்டிக் வட்டம் (66½° வ) வரையிலும், தென் அரைக்கோளம் (23½° தெ) மகரரேகை முதல் (66½° தெ) அண்டார்டிக் வட்டம் வரையுள்ள பகுதிகளில் சூரியக்கதிர்கள் சாய்வாக விழுவதால் இங்கு மிதமான வெப்பநிலை நிலவுகிறது.
2. எனவே இப்பகுதி மிதவெப்பமண்டலம் என அழைக்கப்படுகிறது.

**இ) குளிர் மண்டலம்:**

1. வட அரைக்கோளம் ஆர்டிக் வட்டம் (66½° வ) முதல் வடதுருவம் (90° வ) வரையிலும், தென் அரைக்கோளம் அண்டார்டிக் வட்டம் (66½° தெ) முதல் தென்துருவம் (90° தெ) வரையுள்ள பகுதிகளில் சூரியக் கதிர்கள் ஆண்டு முழுவதும் மிகவும் சாய்ந்த நிலையில் விழுவதால், இங்கு மிக மிக குறைவான வெப்பநிலை நிலவுகிறது.
2. எனவே இப்பகுதி குளிர்மண்டலம் என அழைக்கப்படுகிறது.


**4. இந்தியாவின் திட்டநேரத்தைப் பற்றி விளக்குக.**

**இந்தியாவின் திட்டநேரம்: (Indian standard time)**

1. இந்தியாவின் தீர்க்கக் கோடுகளின் பரவல் 68°7′ கிழக்கு முதல் 97°25′ கிழக்கு வரை உள்ளது.
2. இதன் அடிப்படையில் சுமார் 29 தீர்க்கக்கோடுகள் இந்தியாவின் வழியே செல்கின்றன.
3. ஆகவே இந்தியாவிற்கு 29 திட்ட நேரங்கள் கணக்கிடுவது நடைமுறைக்கு சாத்தியமற்றது.
4. எனவே இந்தியாவின் மையத்தில் செல்லும் 82½° கிழக்கு தீர்க்கக்கோட்டினை ஆதாரமாகக் கொண்டு இந்திய திட்ட நேரம் IST (Indian Standard Time) கணக்கிடப்படுகிறது.

**செயல்பாடு:**

**கொடுக்கப்பட்டுள்ள வலைப்பின்னலில் (Grid) ஐந்து இடங்கள் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றை நீங்கள் உற்று நோக்கி கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட இடங்களில் அவற்றின் அட்சதீர்க்க அளவைகளைக் குறிக்கவும்.**




புவி வலைப்பின்னல்


TNPSCJOB | www.tnpscjob.com

This is only for Sample Materials TNPSCJOB
for full Book Order Online or Available at all Leading Bookstores

# குடிமையியல்

## அலகு 1

# மக்களாட்சி

### கற்றல் நோக்கங்கள்

- மக்களாட்சி என்பதன் பொருளை அறிதல்
- மக்களாட்சியின் வகைகளை அறிந்து கொள்ளல்
- நம் அரசமைப்புச் சட்டத்தின் கட்டமைப்பை அறிந்து வியத்தல்
- மக்களாட்சியின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளல்



## பயிற்சி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. ஆதிமனிதன் __________ பகுதியில் குடியேறி விவசாயம் செய்யத் தொடங்கினான்.**

அ) சமவெளி ஆ) ஆற்றோரம்
இ) மலை ஈ) குன்று [விடை : ஆ) ஆற்றோரம்]

**2. மக்களாட்சியின் பிறப்பிடம் __________ .**

அ) சீனா ஆ) அமெரிக்கா
இ) கிரேக்கம் ஈ) ரோம் [விடை : இ) கிரேக்கம்]

**3. உலக மக்களாட்சி தினம் __________ ஆகும்.**

அ) செப்டம்பர் 15 ஆ) அக்டோபர் 15
இ) நவம்பர் 15 ஈ) டிசம்பர் 15 [விடை : அ) செப்டம்பர் 15]

**4. நேரடி மக்களாட்சியில் வாக்களிப்பவர் __________ .**

அ) ஆண்கள் ஆ) பெண்கள்
இ) பிரதிநிதிகள் ஈ) வாக்காளர்கள் [விடை : ஈ) வாக்காளர்கள்]

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. நேரடி மக்களாட்சியைச் செயல்படுத்தும் நாடு __________. [விடை: சுவிட்சர்லாந்து]
2. மக்களாட்சிக்கான வரையறையை வகுத்தவர் __________ . [விடை: ஆப்ரகாம் லிங்கன்]
3. மக்கள் __________ அளிப்பதன் மூலம் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். [விடை: வாக்கு]
4. நம் நாட்டில் __________ மக்களாட்சி செயல்படுகிறது. [விடை: பிரதிநிதித்துவ]



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**2.** **ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகையுடன் வருவாய் அதிகம் இருக்கும் ஊர்களை ________ என்கிறோம்.**

அ) மாநகராட்சி ஆ) நகராட்சி இ) ஊராட்சி ஈ) பேரூராட்சி

[விடை: (ஆ) நகராட்சி]

**3.** **நகராட்சிகள் அதிகமாக உள்ள மாவட்டம் ______________ மாவட்டம்.**

அ) திருவள்ளூர் ஆ) சென்னை

இ) காஞ்சிபுரம் ஈ) வேலூர் [விடை: (இ) காஞ்சிபுரம்]

**4.** **நீலகிரி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் _____ ஊராட்சி ஒன்றியங்கள் தான் உள்ளன.**

அ) 5 ஆ) 4 இ) 10 ஈ) 12 [விடை: (ஆ) 4]

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. கிராம சபையே ____________ அமைப்பின் ஆணிவேராகும். [விடை: மக்களாட்சி]
2. கிராம சபை கூட்டம் ஆண்டுக்கு ____________ முறை கூடும். [விடை: நான்கு]
3. பஞ்சாயத்து ராஜ் சட்டம் __________ ஆண்டு கொண்டு வரப்பட்டது. [விடை: 1992]
4. உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு _____ சதவீதம் இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. [விடை: 33%]

## III. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1) | பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் 50% இடஒதுக்கீடு | - அ). சென்னை |
| 2) | மாவட்ட ஊராட்சிகள் | - ஆ). 125 |
| 3) | மாநிலத் தேர்தல் ஆணையம் | - இ). 31 |
| 4) | நகராட்சிகள் | - ஈ). 2016 |

[விடை: 1) ஈ 2) இ 3) அ 4) ஆ]

## IV. விடையளிக்கவும்

**1.** **32 மாவட்டங்கள் இருக்கும்போது 31 மாவட்ட ஊராட்சிகள் என்பது ஏன்?**

சென்னை மாவட்டத்தை தவிர மற்ற அனைத்திலும் மாவட்ட ஊராட்சிகள் உள்ளன. சென்னை மாவட்டம ஒரு மாநகராட்சி என்பதால் 31 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன.

**2.** **கிராம ஊராட்சி என்றால் என்ன?**

கிராமங்களில் செயல்படும் ஊராட்சி அமைப்பு கிராம் ஊராட்சி ஆகும்.

**3.** **ஊராட்சி ஒன்றியம் என்றால் என்ன? அதன் உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந்து எடுக்கப்படுகின்றனர்?**

பல கிராம ஊராட்சிகள் ஒன்றிணைந்தது ஊராட்சி ஒன்றியம் எனப்படும். (கவுன்சிலர்) ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் மக்களால் தேர்ந்து எடுக்கப்படுகிறார். கவுன்சிலர்கள் தங்களில் ஒருவரை ஊராட்சி ஒன்றியத் தலைவராகத் தேர்ந்தெடுப்பர். துணைத் தலைவரும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

**4.** **மாவட்ட ஊராட்சி - குறிப்பு தருக.**

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட ஊராட்சி அமைக்கப்பட்டுள்ளது. 50,000 மக்கள் தொகை என்ற அடிப்படையில் மாவட்டம் பல பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. பகுதி உறுப்பினர்களைக் கிராம ஊராட்சி மக்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கின்றனர். மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் தங்களின் ஒருவரை மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கின்றனர்.

**5.** **உள்ளாட்சியில் பெண்களின் பங்கு பற்றி விளக்கவும்.**

அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் பெண்கள் பங்கேற்கும் வகையில் 33% இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. 2011-ல் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் பெண்கள் 38% இடங்களில் வெற்றி பெற்றனர். 2016ஆம் ஆண்டு தமிழக அரசு பெண்களுக்கு உள்ளாட்சியில் 50% இடஒதுக்கீடு வழங்க சட்டதிருத்தம் செய்துள்ளது.

☆ ☆ ☆



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**33.** எல்லா உயிர்களும் மகிழ்வோடு வாழப் புத்தர்பிரான் கூறிய அறிவுரைகள் யாவை?

(அல்லது)

மணிபல்லவத் தீவு எவ்வாறு காட்சி அளித்தது?

**34.** வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட நிகழ்வைச் சுருக்கமாக கட்டுரை வரைக.

(அல்லது)

காந்தியடிகள் என்னும் தலைப்பில் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

**குறிப்பு:** முன்னுரை, பிறப்பும் வளர்ப்பும், கல்விப்பணி, பிற திட்டங்கள், தமிழ்ப்பற்று.

## VI. அனைத்து வினாக்களுக்கும் விடையளி :

**(8 × 1 = 8)**

**35.** கலைச் சொல் தருக

Literature

**36,.** ‘ஆறு’ இருபொருள் தருக.

**37.** பாடலில் இடம் பெற்றுள்ள மோனைச் சொற்களை எழுதுக.

அன்னை நாட்டின் அமுத சுரபியில்
அன்னிய நாடுகள் பசிதீர

**38.** தமிழ் எண்களை எழுதுக.

அ. 25 ஆ. 30

**39.** கீழ்க்காணும் தொடரில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.

ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது.

**40.** சரியான தொடரை கண்டறிந்து எழுதுக.

அ) யாவரும் ஊரே யாதும் கேளிர்

ஆ) யாதும் ஊரே யாவரும் கேளிர்

இ) ஊரே யாதும் கேளிர் யாவரும்

**41.** சொற்றொடரில் அமைந்து எழுதுக.

மனிதநேயம்

**42.** தொடரில் அமைந்த சினைப்பெயரை எடுத்து எழுதுக.

கைகள் இரண்டும் பிறர்க்கு உதவ வேண்டும்.

☆ ☆ ☆



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**வேலுநாச்சியாரின் திட்டம் :**

காளையார் கோவிலைக் கைப்பற்றியதும், உடனே சிவகங்கையைத் தாக்கலாம் என்று பெரிய மருது கூறினார். அதற்கு வேலுநாச்சியார் "அவசரம் வேண்டாம், இப்போது சிவகங்கை கோட்டைக் கதவுகள் அடைக்கப்பட்டிருக்கும். வரும் விஜயதசமித் திருநாள் அன்று கதவுகள் திறக்கப்படும். அப்போது உள்ளே நுழையலாம்" என்றார். "விஜயதசமி நாளில் பெண்களுக்கு மட்டும் கோட்டைக்குள் செல்வதற்கு அனுமதியுண்டு. பெண்கள் பிரிவினர் கூடைகளில் பூக்கள், பழங்கள் ஆகியவற்றுடன் ஆயுதங்களை மறைத்துச் செல்லட்டும். அவர்கள் உள்ளே தாக்குதலைத் தொடங்கியதும் ஆண்கள் பிரிவினரும் கோட்டைக்குள் நுழைந்து தாக்கி ஆங்கிலேயரை விரட்டிவிடலாம்" என்றார்.

**உடையாளுக்கு நடுகல் :**

வேலுநாச்சியாரைக் காட்டிக் கொடுக்குமாறு ஆங்கிலேயர்கள் உடையாள் என்னும் பெண்ணை வற்புறுத்தியும், அவள் மறுத்ததால் அவளைக் கொன்றுவிட்டார்கள். அவளுக்கு உரிய முறையில் சிறப்புச் செய்ய வேண்டும் என்றார் அமைச்சர் தாண்டவராயன். வேலுநாச்சியாரின் உத்தரவின்படி நடுகல் நடப்பட்டது. வேலுநாச்சியார் சிவகங்கையை நோக்கிச் சென்றபோது வழியில் உடையாளின் நடுகல்லுக்குத் தாம் வைத்திருந்த தாலியை எடுத்துக் காணிக்கையாகச் செலுத்தி வணங்கினார். வீரர்கள் "உடையாள் புகழ் ஓங்குக" என்று முழங்கினர்.

**குயிலியின் நாட்டுப்பற்று :**

குயிலி பெண்கள் படைப்பிரிவுடன் மாறுவேடத்தில் உள்ளே சென்று ஆயுதக் கிடங்குக்குத் தீ வைத்தாள். வேலுநாச்சியார் படைவீரர்களுடன் கோட்டைக்குள் புகுந்தார். ஆங்கிலேயரின் படையுடன் கடுமையாகப் போரிட்டு வென்றார். ஆங்கிலப்படை கோட்டையைவிட்டு ஓடியது. இவ்வெற்றிக்குப் பின் குயிலியின் உயிர்த் தியாகம் இருந்தது. குயிலி தன் உடலில் தீ வைத்துக் கொண்டு ஆயுதக் கிடங்குக்குள் குதித்துவிட்டாள். தன் உயிரைக் கொடுத்து நாட்டை மீட்டுக் கொடுத்தாள் குயிலி. வேலுநாச்சியார், "அவளது துணிவுக்கும் தியாகத்திற்கும் வீரத்திற்கும் தலை வணங்குகிறேன்" என்று கூறினார்.

**முடிவுரை :**

வேலுநாச்சியாரின் வீரம், மருது சகோதரர்களின் ஆற்றல், ஐதர் அலியின் உதவி ஆகியவற்றோடு குயிலியின் தியாகமும் இணைந்ததால் சிவகங்கை மீட்கப்பட்டது.

(அல்லது)

**முன்னுரை :**

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்கிறது ஆத்திச்சூடி. நமக்கு நம் அன்னையும் தந்தையும் முன்னறி தெய்வமாக விளங்குவது போல நம் தேசத்திற்குத் தந்தையாக இருந்து முன்னறி தெய்வமாக விளங்கியவர் காந்தியடிகள். அவர் நமது நாட்டின் விடுதலைக்காகவும், வளர்ச்சிக்காகவும், அமைதிக்காகவும் தன்னையே ஈந்து கொண்டவர். அவருடைய அகிம்சைக் கொள்கை உலகில் அமைதியை விரும்பும் அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இத்தகைய பெருமைகளைப் பெற்றிருந்தும் தன் எளிய தோற்றத்துடனேயே தாய்நாட்டிற்கும், தாய்நாட்டு மக்களுக்கும் தொண்டு செய்த காந்தியடிகளே நான் விரும்பும் தலைவராவார்.

**பிறப்பும் வளர்ப்பும் :**

மகாத்மா காந்தியடிகள் குஜராத் மாநிலம் ஃபோர் பந்தரில் 1869-ஆம் ஆண்டு அக்டோபர் 2-ம் தேதி காபா காந்தி - புத்லிபாய் இணையருக்குக் கடைசி மகனாகப் பிறந்தார்.


TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**VII.**

1. Purvaja ate **a** salad of (raw vegetables) for dinner.
2. Sujatha is reading **an** (interesting story) in the library.
3. The child was playing with **a** (yellow balloon).

### SECTION - C (Prose)

**VIII.**

1. Rainy Season.
2. The farmer had to travel far to get water for his thirsty crops.
3. A pair of trousers.
4. Delhi had grand and impressive buildings and monuments, where as Patna had none of them.
5. No, they are not friendly with each other.

**IX.**

1. The hole in the ground collected the water that fell and the grass grew into a brighter green around its edges.
2. The cavalry officers mounted on their grand horses were bright in appearance. As the frightened cow charged straight at the horses, they panicked and scattered. There was a regular stampede and the horses were out of control. One of the cavalry officers fell into the ditch.
3. The richest farmer got upset, when the poor farmer called the village priest to bless their fortune. He was upset because he was not invited for it.

### SECTION - D (Poem)

**X.**

Summer comes
in a blaze of heat
with sunny smiles
and dusty feet
Then seasons change
to muddy roads
monsoons and mangoes
leapfrogs and toads

**XI.**

1. a) Whenever the leaves fall down, it is autumn in India.
2. a) The rhyming words are slack - tack . The rhyming scheme for this stanza is 'a a'.
3. a) 'You' refers to 'the reader'.

**XII.**

1. The poet describes the Indian seasons vividly in a simple form. The sumer season starts with intense heat. It is like a bright flame or fire. It brings cheerfulness to people and makes their feet dusty. Then, the seasons change. Monsoons come in bringing muddy roads, ripe mangoes, leaping frogs and toads everywhere. Spring is pretty but short. It is also sweet because we can smell the freshness of green grass from our garden. The poet compares the autumn season in the West to India. Leaves change their colours into red, yellow and brown in the West, whereas the trees shed their leaves in India.
2. Yes, this poem is an ironic poem because the word 'sage' is used in an ironic sense to refer to a person who is dull witted. It insists on how learned men lack practical common sense.
3. No, nothing dreadful happened. The events in the poem are humorous. The illogical behaviour of the sage creates humour throughout the poem.

### SECTION - E (Supplementary)

**XIII.**

1. Kamala Das
2. Muthassi
3. Malathi Kutty

**XIV.**

1. Mahesh was brought to court because he ill-treated the books, notebooks, school bags and the pencil box.
2. It was a dream, we know this at the end, when Mahesh's mother shakes him up to get up, as it was late for school.
3. Justice Mathematics said these words to Mahesh.

**XV.**

1. (b) distant
2. (a) central hall
3. (a) courtyard

**XVI.**

1. Ettan - Elder brother
2. Ammayi - Mother-in-law
3. Muthassi - Father's mother



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



## III. பொருத்துக: $5 \times 1 = 5$

| | | | |
|---|---|---|---|
| 16. | சதுரத்தின் ஒரு பக்கம் | – | சமச்சீர்க்கோடு இல்லை |
| 17. | முக்கோணத்தின் சுற்றளவு | – | ஒரு சமச்சீர்க்கோடு |
| 18. | செவ்வகம் | – | $4 \times s$ அலகுகள் |
| 19. | இணைகரம் | – | $a + b + c$ அலகுகள் |
| 20. | இருசமபக்க முக்கோணம் | – | இரு சமச்சீர்க்கோடுகள் |

## பகுதி - ஆ

## IV. எவையேனும் பத்துக்கு விடையளிக்க, வினா எண் 35 க்கு கண்டிப்பாக விடையளி

$10 \times 2 = 20$

21. $\frac{3}{4}$ இன் மூன்று சமானப் பின்னங்களைக் காண்க.


22. சுருக்குக. $3\frac{7}{18}$ தகா பின்னம்

23. $\frac{1}{7}$ மற்றும் $\frac{3}{9}$ இன் கூடுதல் காண்க.

24. ஓர் எண்கோட்டை வரைந்து 4, 3, 6, 1 மற்றும் 5 ஆகிய முழுக்களை அதன் மீது குறிக்கவும்.

25. கொடுக்கப்பட்ட எண்களுக்கு இடையே உள்ள அனைத்து முழுக்களையும் எழுதுக. 5 மற்றும் 4

26. கொடுக்கப்பட்ட வடிவத்தின் சுற்றளவு காண்க.





27. 8 செ.மீ பக்கமுள்ள சதுரத்தின் சுற்றளவு மற்றும் பரப்பளவு காண்க.

28. ஓர் அசமபக்க முக்கோணத்தின் சுற்றளவு 40 செ.மீ. அதன் இரண்டு பக்கங்கள் 13 செ.மீ மற்றும் 15 செ.மீ எனில் மூன்றாவது பக்கம் காண்க.

29. சமச்சீர்த் தன்மை விவரி.

30. பின்வருவனவற்றின் சுழல் சமச்சீர் வரிசையைக் கண்டுபிடிக்க.




31. கட்டத்திலுள்ள எழுத்துக்களில் எந்தெந்த எழுத்துக்களுக்கு
    **(i)** சமச்சீர்க் கோடு இல்லை
    **(ii)** சுழல் சமச்சீர்த் தன்மை கொண்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| A | M | P | E |
| D | I | K | O |

32. கீழ்க்கண்ட அமைப்பில் அடுத்த மூன்று எண்களை எழுதுக.
    **(i)** 50, 51, 53, 56, 60, .........
    **(ii)** $\frac{21}{33}, \frac{321}{444}, \frac{4321}{5555}$

33. 12 மீ பக்க அளவுளடய ஒரு சதுர வடிவிலான வீட்டு மனைக்கு வேலி அமைக்க மீட்டருக்கு ₹ 15/– வீதம் ஆகும் செலவைக் காண்க.


TNPSCJOB | www.tnpscjob.com